# பொருள் 2 :கடவுள் தம் மக்களைப் பராமரிக்கிறார்

பாடம் 6

## 6. எலியாவை போசித்த கடவுள் நம்மையும் போசித்து பெலப்படுத்துவார்

பசி, தாகம், களைப்பு என்பன உடல் தொடர்பான உணர்வுகள்! இவ்வுணர்வுகள் பாடசாலைவிட்டு வெயிலில் வீடு திரும்பும்போது நாம் இலகுவில் உணரக்கூடியதாயிருக்கிறதல்லவா? இறைவாக்கினர் எலியாவின் வாழ்வில் உணவின்றி அல்லலுற்ற பல அனுபவங்களின் மத்தியில் கடவுள் அற்புதமாக அவரைப் போசித்து, உளரீதியாகவும் ஆன்மீகரீதியாகவும் பெலப்படுத்தினார்.



- எலியாவிற்கு உணவு தேடிக்கொடுக்கும்படி கடவுள் காகங்களுக்குக் கட்டளை பிறப்பித்தார்.
- சாரிபாத் என்ற இடத்தில் ஒரு ஏழை விதவையிடம் எலியாவிற்கு உணவு வழங்கும்படி கடவுள் கூறினார், சிறிது உணவே இருந்த அப்பெண்ணின் பானையில் ஒரு நாளும் மாவும் எண்ணெயும் குறைந்து போகாது செய்தார்.

### எலியாவின் பாலைநில அனுபவம்

கடவுளின் கட்டளைக்கமைய நீதியாகவும், நேர்மையாகவும், இரக்கத்துடன் தமது திருப்பணியை எலியா மேற்கொண்டபடியால் பாதிப்புற்ற ஈசபேல் என்ற இஸ்ரயேலின் அரசி அவரைக்கொன்றுபோட முயற்சி செய்தாள். எனவே எலியா பீதியடைந்து நகரைவிட்டுப் பாலைநிலத்திற்குத் தப்பிச் சென்றார். அங்கு அவருக்கு ஏற்பட்ட அனுபவங்கள் பல. அவரே நமக்குக் கூறுவதாயிருந்தால் இவ்வாறு இருந்திருக்குமல்லவா!

ஈசபேல் அரசியிடமிருந்து என் உயிரைக் காத்துக்கொள்வதற்காக, பெயர்செபாவிற்கு வெளியே பாலை நிலத்தில் முழுநாளும் பிரயாணம் செய்து அதிக களைப்புற்றிருந்தேன். ஒரு சூரைச்செடியைக் கண்டதும் அதன் நிழலில் அமர்ந்து இளைப்பாறினேன். பல எண்ணங்கள் எனக்குள் தோன்றின. அப்பப்பா, “ஆண்டவரே நான் வாழ்ந்தது போதும்; என்உயிரை எடுத்துக்கொள்ளும்” என்று கூறியவாறே அங்கு நித்திரை அடைந்து விட்டேன்.



தீடீரென, “எழுந்து சாப்பிடு” என்ற ஒரு குரல் . இது கனவா அல்லது நனவா என்று கண்விழித்துப் பார்த்தபோது, ஆகா! சுட்ட அப்பமும் குவளையில் தண்ணீரும் காணப்பட்டன; நம்பமுடியவில்லை. அந்த உணவினாலும் நீரினாலும் உடலைத் தேற்றிக்கொண்டு திரும்பவும் படுத்து நித்திரை கொண்டேன். திரும்பவும் ஆண்டவரின் தூதன் என்னைத் தட்டி எழுப்பினார். “எழுந்து சாப்பிடு; ஏனெனில் நீ நீண்ட பயணம் செய்யவேண்டும்.” என்றார். அவர் கொடுத்த உணவினால் வலிமையடைந்து, நாற்பது நாட்கள் பகல் , இரவாகப் பிரயாணம் செய்தேன். முடிவில் ‘கடவுளின் மலை’ என்று கருதப்படும் ‘ஓரேப்’ மலையை அடைந்தேன்.

என் திருப்பணி முடிவுற்றது; இனி ஆறுதலாயிருக்கலாம் என்று எண்ணினாலும் கடவுள் என்னை விட்டபாடில்லை. எனது வாழ்வில் தொடர்ந்து செயல்பட்டார். அவர் என்னோடு பேசினார். நான் அடைக்கலம் புகுந்திருந்த குகையைவிட்டு வெளியே அழைத்தார். “என் திருமுன் வந்து நில். இதோ ஆண்டவராகிய நான் (இங்கு) கடந்துசெல்ல இருக்கிறேன்” என்றார். உடல்ரீதியாக என்னைப் போசித்த ஆண்டவர், இப்போது தமது பிரசன்னத்தினால் என்னைப் பெலப்படுத்தப் போகிறார் என்று உணர்ந்துகொண்டேன்.

பெரும் சுழல் காற்று வீசிற்று; நில நடுக்கம் தோன்றிற்று. பின்னர் தீ கிளம்பிற்று. அவற்றின் நடுவில் ஆண்டவரைக் காண எதிர்பாத்தேன். என்றாலும் அவரைக் காணவில்லை. பின்னர் ‘அடக்கமான ஒரு மெல்லிய ஒலி’ கேட்டது; குகைக்கு வெளியே வந்தேன். ஆண்டவரின் பிரசன்னத்தை உணர்ந்தேன். என்னோடு கதைத்தார். திரும்பவும் நான் வந்த தமஸ்கு பாதை வழியே செல்ல கட்டளையிட்டார். சென்று சிரியாவின் மன்னரை நியமிக்கவும், இஸ்ரயேலின் ஏகூவை அரசனாகத் திருப்பொழிவு செய்யவும் கட்டளையிட்டார். திரும்பவும் பணி செய்ய பெலனடைந்தேன். எனக்குப் பின் திருப்பணியைத் தொடர எலிசாவை அருள்பொழிவு செய்யவும் கட்டளை பெற்றேன்.”

## ஆண்டவர் இயேசு மக்களைப் போசிக்கிறார்.

தம் வார்த்தைகளை ஆவலோடு கேட்கவிரும்பி அதிக தூரம் வந்து உணவின்றி இருந்த மக்கள்மீது பரிவு கொண்டு ஆண்டவர் அவர்களுக்கு உணவு வழங்கினார். எனினும் இயேசு தமது 40 நாள் பாலைவன உபவாச அனுபவத்தின் பின்னர் பசியால் எதிர்கொள்ளப்பட்டாலும், உடலுக்கு உணவைப் பார்க்கிலும், ஆன்மீக ஊட்டமான இறைவார்த்தையே முக்கியமானதென வலியுறுத்துகிறார். உடலின் தேவைகளைப் பற்றிய கரிசனைக்கு மேலாக இறையாட்சியில் முதன்மை யானவற்றை நாடும்படி கூறுகிறார்.

**வாசிப்போம்** மத்தேயு 6: 25, 33

"உயிர் வாழ எதை உண்பது, எதைக் குடிப்பது என்றோ, உடலுக்கு எதை உடுத்துவது என்றோ, நீங்கள் கவலை கொள்ளாதீர்கள்."

"அனைத்திற்கு மேலாக அவரது ஆட்சியையும் அவருக்கு ஏற்புடையவற்றையும் நாடுங்கள். அப்போது இவையனைத்தும் உங்களுக்குச் சேர்த்துக் கொடுக்கப்படும்."

**செயற்பாடு**

மத்தேயு 6: 25- 34 னை வாசித்து, பின்வருவனவற்றைத் தொடர்புபடுத்தவும்.

| | |
|---|---|
| 1. உணவைவிட முக்கியமானது | 1. கடவுளின் ஆட்சி |
| 2. உடையை விட முக்கியமானது | 2. உயிர் |
| 3. பறவைகளுக்கு உணவளிப்பவர் | 3. பறவைகள் |
| 4. பறவைகளை விட மேலானவர்கள் | 4. நீங்களே |
| 5. உணவைச் சேர்த்து வைக்காதவை | 5. நூறப்பதில்லை |
| 6. காட்டுச் செடிகள் | 6. கடவுள் |
| 7. புல்லுக்கு அணி செய்கிறவர் | 7. உடல் |
| 8. நாம் நாடவேண்டியது | 8. விண்ணகத் தந்தை |

**கீறிட்ட இடத்தை நிரப்புக.**

1. ஓரேப் என்பதன் கருத்து ..................................................................................................

2. எலியாவை சாப்பிடும்படி அழைத்தவர்.........................................................................

3. எலியா அமர்ந்து இளைப்பாறியது ..........................................................................

4. “என் திருமுன் ...............................................................................................................

5. எலியா ஆண்டவரின் பிரசன்னத்தை உணர்ந்து ..............................................

6. எலியா அருள் பொழிவு செய்யவேண்டியவர் ........................................................